1975 ஏப்ரல் 1]

பாலக்கோம்பையில் புதிய கண்மாய்

* 510 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த பாலக்கோம்பையில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இத்திட்டம் பரிசிலனையில் உள்ளது.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்தக் கண்மாய் திட்டம் பல ஆண்டுகாலமாக அரசின் பரிசிலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. இந்தப் பகுதி இப்போது மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் அடிப்படையில்—அவர்கள் இப்போது வேலை எதுவும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்—அந்தத் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்து துவங்குவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது ஒரு சிக்கனமற்ற திட்டம் என்று ஏற்கனவே கைவிடப்பட்டது. அதை எப்படியாவது நிறைவேற்ற முடியுமா என்று பார்க்கும்படி வருவாய்த் துறை வாரியத்தைக் கேட்டு இருந்தோம். வருவாய்த்துறை வாரியத்திட மிருந்து இன்னும் பரிந்துரை அரசுக்கு வரவில்லை.

நல்லநாயகபுரம் ஏரிக்கு வரத்துக்கால்வாய்

* 511 வினா—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், வஞ்சினபுரம் ஊராட்சி நல்லநாயகபுரம் ஆயக்கட்டு ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டின் தொகை என்ன?

(உ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?